# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியதரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுதரமதிப்பீட்டில் A+தகுதிபெற்றது)

---

நாள்: 05.12.2017

## அழகப்பாபல்கலைக்கழகத்தில் புவிஅறிவியல் துறை துவக்கம்

தேசிய தரநிர்ணைய குழுவால் A+ தகுதியைப் பெற்று இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் முன்னிலை வரிசையில் இருக்கும் காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழகம் தற்பொழுது புவிஅறிவியல் (GEOLOGY) என்ற துறையைத் துவங்கி உள்ளது. வள்ளல் அழகப்பர் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு அழகப்பாகல்லூரியை துவங்கும் பொழுது புவிஅறிவியலை நம் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக இனம் கண்டு இத்துறையை துவக்கினார். இப்போது, அழகப்பாபல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிதிட்டங்களின் கண்டுபிடிப்புக்களை அகில உலகத்தின் பார்வைக்கு எடுத்து சென்றுள்ள துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா, அவர்கள் புவிஅறிவியலை தேசியவளர்ச்சிக்குமிகஆழமாகப்பயன்படுத்துவதற்காக இத்துறையைத் துவக்கியுள்ளார். இது பற்றி கடந்த நவம்பர் 24, 2017 அன்று நடைபெற்ற பத்திரிகை மற்றும் ஊடகங்களின் கலந்தாய்வில் தெரிவித்தார்.

அப்போது புவியியல் அறிஞரும், காந்திகிராம பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரும், தற்பொழுது அழகப்பாபல்கலைகழகத்தின் மதிப்புமிகு பேராசிரியருமான பேரா.சோம.இராமசாமி அவர்கள் புவி அறிவியலின் மகத்துவத்தையும், அழகப்பாபல்கலைக்கழகத்தில் இத்துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

விண்வெளிசார் செயற்கைக்கோள் படங்கள் மூலம் கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வுகளில் இந்திய புவித்தட்டை சுமார் 65 மில்லியன் ஆண்டுகளில் 6500 கி.மீ வடக்கே தள்ளிய அழுத்த சக்தியானது இன்றும் வலுவாக உள்ளது என்றும், அச்சக்தி இந்தியத்தட்டை வடக்கே தள்ளுவதாலும், ஆனால் அதே சமயம் வடக்கில் இருக்கும் இமயமலை நகரவிடாமல் தடுப்பதாலும், இந்திய தட்டு மண்புழு போல் கிழக்கு-மேற்காக பெரிய மேடுகளாகவும் பள்ளங்களாகவும் மாறிமாறி தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே இமயமலையின் அடிவாரம் வரை உருவாகி வருகின்றன. மேலும் இந்த சக்தியால் இந்திய துணைக்கண்டத்தில் பலதிசைகளில் நீளமான மிகப்பெரிய வெடிப்புகள் உருவாகி வருகின்றன.

சமீபகால ஆய்வில் தென் இந்தியாவில் மங்களூர்-பெங்களூர்-சென்னை வழியாகவும், கொச்சி-மதுரை-இராமேஸ்வரம் வழியாகவும் பூமி மேல் எழும்பியும் இவை இரண்டிற்கும் நடுவே பொன்னணி-பாலக்காடு-மணல்மேல்குடி வழியாக பூமி கீழ்நோக்கி வளைந்தும் இருப்பது வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்த புவியியல் சக்தியால் இந்தியாவின் பல பகுதிகளில் மிகப்பெரிய அளவில் நிலம், நதிகள், கடலோரம், நிலத்தடிநீர் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, காவேரி ஆறு, ஒக்கேனக்கல்-சென்னைப் பாதையில் இருந்து ஒக்கேனக்கல்–தஞ்சாவூர் பாதைக்கு மாறி இருகின்றது.

மேலும், தென்பெண்ணை ஆறு திருவெண்ணெய் நல்லூருக்கு அருகே புதையுறுவதும், காவேரி நதி தஞ்சாவூர் டெல்டா பகுதியில் திருச்சிராப்பள்ளி-வேதாரண்ணியம் பாதையில் இருந்து திருச்சிராப்பள்ளி-கொள்ளிடம் பாதையில் மாறியுள்ளதும், 25,000 பிறை வடிவக் குளங்களால் தனித்தன்மை வாய்ந்த வைகை டெல்டா உருவாகி உள்ளதும், தமிழ்நாட்டின் பல நகரங்களின் (சென்னை, காரைக்குடி) கீழே நதிகள் புதையுண்டு இருப்பதும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

இதுபோன்ற நில அசைவுகள், நதிகளின் செயல்பாடுகள் மற்றும் கடலோர நீரோட்டச் சக்திகள் ஆகியவை இணைந்து இந்தியாவின் கடற்கரை பகுதிகளை உருவாக்குவத்தோடு அவற்றின் இயற்கை வளங்களையும், இயற்கைச் சீற்றங்களையும் கட்டுப்படுத்துவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆகவே புதிதாக துவங்கப்பட்ட புவி அறிவியல் (APPLIEDGEOLOGY) துறையானது இச்செயல்பாடுகளை ஆராய்ந்து அவற்றின் மூலம் காவிரி மற்றும் வைகை டெல்டா பகுதிகளின் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களைக் கண்டறிதல், வெப்பநீர் ஊற்றுகளின் கணிப்பு, வைகையில் உள்ள சுமார் 25,000 பிறை வடிவ குளங்களைப் புத்துயிர் ஊட்டி நீர் வள ஆதாரங்களைப் பெருக்குதல், புதிதாக உருவாகி வரும் பூமி வெடிப்புகளால் நிலத்தடி நீரின் தாக்கம் மற்றும் அவற்றின மூலம் நிலத்தடி நீர் வளம் கணித்தல், தமிழகத்தின் கடலோர பகுதிகளில் காணப்படும் நீண்ட கடற்கரை மணல் மேடுகளில் ஒருங்கிணைந்த நிலத்தடி நீரோட்ட கணிப்பு, இராமநாதபுரம் கடலோர பகுதிகளில் உள்ள காயல்களில் சிறிய துறைமுகங்கள், சிறிய கப்பல் மற்றும் படகுகள் கட்டுமான தொழில் உருவாக்குதல் பற்றிய ஆய்வு, கடலோர பகுதிகளில் கடல் நீரோட்டத்தை ஆராய்ந்து அவற்றின் மூலம் இராமர்-சேது பாலம் உருவானதைக் கண்டறிதல், கச்சத்தீவிற்கும் தமிழ்நாடு நிலபகுதிக்கும் இடையே உள்ள நிலப் பாலத்தை கண்டறிந்து கச்சத்தீவு உருவானதைக் கணித்தல், வைகை வடிநிலங்களில் கடந்தகால துறைமுகங்களின் தடயங்களைக் கண்டறிதல், பக்கிங்காம் கால்வாயை தமிழகத்தின் கடலோர பகுதி வழியாக வடக்கே முட்டுக்காட்டிலிருந்து தெற்கே தூத்துக்குடி வரை புனரமைத்து நீட்டித்தல் போன்ற புதிய பல ஆய்வுகளை இத்துறை மேற்கொள்ளும் என்று கூறினார்.

மேலும் புதியதாக துவங்கப்பட்டுள்ள புவி அறிவியல் துறை மற்ற துறைகளுடன் இணைந்து தமிழகத்தின் கடலோர நாகரிகம், கடல் கோள்களால் அழிந்த துறைமுக நகரங்கள், தமிழகத்தின் தென்பகுதியில் குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகளையும் மேற்கொள்ளும். மேலும் புராதனச் சின்னங்களின் வயது, கடந்தகால தமிழர்கள் பயன்படுத்தியப் பொருட்களின் வயது மற்றும் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பதிவுகளில் கூறப்பட்டுள்ள காலவரையறை ஆகியவற்றை நிலவியலோடு ஒப்பிட்டு, கார்பன் வயதுக் கணிப்புகள் மூலம் காலவரயரைகளைக் கண்டறியும் ஆய்வுகளையும் இத்துறை மேற்கொள்ளும். மேலும், பூகம்பம், புயல், வெள்ளம், சுனாமி, கடலரிப்பு ஆகியவறைப் பற்றியும், அவற்றின் எச்சங்களை கடந்த 10,000 ஆண்டுகள் முதல் ஆராய்ந்து, அவற்றின் மூலம் இப்பேரிடர்களை ஆய்வதோடு முன்னறிவிப்புக்களையும் இத்துறை உருவாக்கும். கிராமப்புறம்சார் புவித்தகவல் அமைப்பியலிலும் (RURAL GEOINFORMATICS) பெரும் பங்காற்ற திட்டமிடும் என்றும் கூறினார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் புவி அறிவியல் துறையில் உள்ள அளவில்லா வாய்ப்புக்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பயனளிக்க வேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் இத்துறை துவங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

பேரா.வி.பாலச்சந்திரன்

பதிவாளர்(பொ.)